**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. NO.60/2016**

**17.02.2023 - வா.சா. 1. ரேகா, சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் பாகம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் 3 இன சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் மொத்தம் 6 இன சொத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளன என்றால் எனக்கு தெரிந்த 3 இன சொத்துக்களை குறிப்பிடுகிறேன். என் கணவருக்கு சேர வேண்டிய பங்கை நான் கோருகிறேன். தாவா சொத்துக்கள் என் கணவரின் பூர்வீக சொத்தாகும். தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தா அல்லது என் கணவரின் பூர்வீக சொத்தாக என்பதை காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.. எனக்கும் என் கணவருக்கும் 30.4.2009ல் திருமணம் ஆனது.. திருமணத்திற்கு பிறகு சுமார் 6 மாதம் நான் ஒன்றாக இருந்தோம். பிறகு என் கணவருக்கு பக்கவாத நோய் வந்து சென்னைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். நானும் உடன் சென்றேன். திருமணத்தின் போது என் கணவர் நல்ல நடமாட்டத்துடன் காணப்பட்டார். என் கணவரை சென்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்று பிறகு ஊருக்கு வரும் வழயில் செஞ்சி கூட்ரோடில் என்னை காரில் இருந்து இறக்கி விட்டுவிட்டார் என்று நான் சொல்வது தவறு என்றும், நானாகவே என் தாயாரை பார்க்க இறங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. பக்க வாத நோய் ஏற்பட்டு 6 ஆண்டுகள் கழித்து தான் என் கணவர் இறந்தார் என்றால் சரிதான். அந்த 6 ஆண்டு காலமும் என் கணவருடன் நான் சேர்ந்து வாழவில்லை என்று சொன்னால் நான் 3 நாட்கள் கழித்து என் கணவர் வீட்டிற்கு செல்ல இருந்தேன் ஆனால் 4ம் பிரதிவாதி தவறாக நான் புகுந்த வீட்டிற்கு வரமாட்டேன் என்று கூறிவிட்டார். என் கணவர் படுத்த படுக்கையாக இருக்கும் போது ஜீவனாம்சம் கோரி எம்.சி.2/2012 செஞ்சி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என் கணவர் நடக்க முடியாத காரணத்தினால் ஒருதலைப்பட்சமாக எனக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் தீர்ப்பிற்கு பிறகு ஜீவனாம்ச தொகையை என்னால் வசூலிக்க முடியவில்லை என்றால் சரிதான். மேலும் நான் செஞ்சி முதன்மை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 205/2015 ஜீவனாம்சம் கோரி வழக்கு என் கணவர், என் மாமனார் ஆகியோர் மீது தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் இருந்து வருகிறது. என் கணவருடன் நான் சேர்ந்து வாழ வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை. என் கணவருடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் இல்லை என்றும், சொத்தில் பங்கு வேண்டும் என்பதற்காக மட்டுமே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 1ம் இன சொத்தை 1ம் பிரதிவாதி அவருடைய

மனைவியின் சகோதரருக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு அந்த உயில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நான் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் உயில் எழுதப்பட்டது என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4 முதல் 6 இன சொத்துக்கள் திருவண்ணாமலை மாவட்டம் மல்லவாடி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்துக்களை நான் ஜீவனாம்சம் கோருவதற்கு முன்னர் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு விற்று விட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா 1வது இன சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அதை உயில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. 2இன சொத்து அனுபவத்தின் அடிப்படையில் பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றும், 3வது இன சொத்து அனுபவத்தின் அடிப்படையில் பட்டா 4ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றும், 4, 5, 6 இன சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாகத்தில் கிடைத்த சொத்துக்கள் என்றும் அதை 5, 6 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றும், எனக்கு பாகம் கோர உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கே பாக உரிமை இல்லை என்பதால் நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் வேறு ஒருவருடன் குடும்பம் நடத்தி வருகிறேன் என்றும், இந்த பாகத்திற்காக அதனை மறைத்து வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/- ரேகா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.